**அரச அபிவிருத்தி நிர்மாணக் கூட்டுத்தாபனம் - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அரச அபிவிருத்தி நிர்மாணக் கூட்டுத்தாபனத்தின் (“கூட்டுத்தாபனம்”) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டம் ஆகியவற்றிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கூட்டுத்தாபனத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கூட்டுத்தாபனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும்

பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கூட்டுத்தாபனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கூட்டுத்தாபனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- கூட்டுத்தாபனம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கூட்டுத்தாபனத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தலுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| இணங்காமையுடன் தொடர்புடைய உரிய நியமம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) **எல்கேஏஎஸ் 08 – கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் வழுக்கள்**<br><br>எல்கேஏஎஸ் 08 இன் 45 மற்றும் 49 ஆம் பிரிவுகளின் பிரகாரம், ஒப்பீட்டுத் தகவல்கள் திருத்தியமைக்கப்படாததுடன் மீளாய்வாண்டிற்கான உரிமைத்துவ மாற்றங்கள் கூற்றில் மேற்கொள்ளப் பட்டிருந்த ரூபா 5,785,978 தொகையான முன்னைய ஆண்டுச் சீராக்கங்கள் தொடர்பில் உரிய வெளிப்படுத்தல்கள் செய்யப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்கப்படும். | கூட்டுத்தாபனம் இலங்கை கணக்கீட்டு நியமங்களை பின்பற்றுவதனை உறுதி செய்ய வேண்டும் |

| | | |
|---|---|---|
| (ஆ) **எல்கேஏஎஸ் - 16 - ஆதனம், பொறி மற்றும் உபகரணம்**<br><br>முழுமையான பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட ரூபா 8,521,619, ரூபா 7,355,774, ரூபா 101,121,258, ரூபா 194,103,638 மற்றும் ரூபா 65,999,216 கிரயமான முறையே கணனி பாகங்கள் மற்றும் மென்பொருட்கள், அலுவலகத் தளபாடங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள், மோட்டார் வாகனங்கள் மற்றும் ஏனைய சொத்துக்கள் எல்கேஏஎஸ் - 16 இன் 51 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் அத்தகைய சொத்துக்களின் பயன்தரு ஆயுட் காலத்தை மதிப்பிடாமலும் அதற்க மைய கணக்கீடு செய்யப்படாமலும் கூட்டுத்தாபனத்தால் தொடரச்சியாக பயன்படுத்தப்பட்டு வருகின்றன. | நிலையான சொத்துக்களை மீள விலைமதித்தல் 2021 ஆம் ஆண்டில் மேற்கொள் ளப்பட்டதுடன் மீள விலை மதித்த சொத்துக்களின் பெறுமதிகளை 2022 இன் நிதிக்கூற்றுக்களிற்கு உள் வாங்குவதற்கான நடவடி க்கை எடுக்கப்படுகின்றது. | கூட்டுத்தாபனம் இலங்கை கணக்கீட்டு நியமங்களை பின்பற்றுவதனை உறுதி செய்தல் வேண்டும். |
| (இ) **எஸ்எல்எ.ஃப்ஆர்எஸ் 10 - ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள்**<br><br>கூட்டுத்தாபனத்திற்கு முழுமையாக உரிமையுடைய துணைக்கம்பனியான திவ்கோசா (பிரைவட்) லிமிடட் நீண்டகால மாக செயற்படாதுள்ளதுடன் இக் கம்பனியை கலைப்பதற்கு 2006 ஆம் ஆண்டில் பணிப்பாளர் சபை தீர்மானித் திருந்தது. கலைக்கும் நடவடிக்கைகள் இதுவரை பூர்த்தியடையாதிருந்ததுடன் கூட்டுத்தாபனத்தினால் ஒன்றித்த நிதிக்கூற் றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | தேவ்கோஷோவா (தனியார்) லிமிடெட் நீண்ட காலமாக இயங்காத கம்பனியாக இருப்பதனால் ஒன்றித்த கணக்குகள் தயாரிக்கப்ப டவில்லை. தற்போது கலைத்தல் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. | கூட்டுத்தாபனம் இலங்கை கணக்கீட்டு நியமங்களை பின்பற்றுவதனை உறுதி செய்ய வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2015 இன் 13 ஆம் இலக்க திருத்திய பொருளாதார சேவைக் கட்டணச் சட்டத்தின் 02 ஆம் பிரிவின் படி, ரூபா 64,158,596 மற்றும் ரூபா 13,654,032 தொகையான முறையே பொருளாதார சேவைக் கட்டணம் (ஈஎஸ்ஈ) மற்றும் அதன் மீதான மிகைஅறவீடு என்பன செலுத்தப்பட்டோ அல்லது 2021 ஆம் ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களிற்கு எடுத்துவரப்பட்டோ இருக்கவில்லை. | கூட்டுத்தாபனம் எதிர் கொண்டுள்ள நிதிச் சிக்கல் காரணமாக பொருளாதார சேவைக் கட்டணம் (ஈஎஸ்ஈ) செலுத்தப்பட வில்லை. இந்த ஈஎஸ்ஈ கட்டணத்தை பதிவழிக்கு மாறு நிதி அமைச்சின் ஊடாக உள்நாட்டு இறை வரித் திணைக்களத்திற்கு கோரிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. | நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு பரிகாரங்க ளின் சரியான மற்றும் நம்பகத் தன்மையை உறுதிப்படுத்த தேவை யான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) சில்லறைக் கடன்பட்டோர் கணக்குகளின் கீழுள்ள சம்பள மற்றும் கூலிக் கட்டுப்பாட்டுக் கணக்கில் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 80,335,283 வரவு மீதி மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் தீர்க்கப் பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய சமபளக் கணக்கையும் சம்பளக் கட்டுப்பாட்டுக் கணக்கையும் 2022 ஆம் ஆண்டில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு பரிகாரங்களின் சரியான மற்றும் நம்பகத் தன்மையை உறுதிப்படுத்த தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளிற்கான ஊ.சே.நி. இற்குச் செலுத்த வேண்டிய பங்களிப்புகள் மீது விதிக்கப்பட்டிருந்த ரூபா 25,871,900 மிகை அறவீடு நிதிக்கூற்றுக் களில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஊ.சே.நி. இற்கான மிகை அறவீட்டை 2022 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் பதவிதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு பரிகாரங்களின் சரியான மற்றும் நம்பகத் தன்மையை உறுதிப்படுத்த தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) பொதுத் திறைசேரியிடமிருந்தான மூலதன மானியம் என பெறப்பட்டிருந்த ரூபா 53,000,000 தொகை அரசாங்க மானியமா அல்லது கடனா என்பதை மெய்மையாய்வு செய்வதற்காக சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வில்லை. | ரூபா 53,000,000 தொகை கொவிட் காலத்தின் போது மீண்டுவரும் மானியமாக வழங்கப்பட்டிருந்ததுடன் அது கணக்குகளில் மீண்டுவரும் மானியமாக கணக் கீடு செய்யப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் தொகைகளை திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்தி ஏற்றுக் கொள்வதற்காக அனைத்து ஆவணச் சான்றுகளும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

### 1.5.3 கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை

பின்வரும் மீதிகளிற்கான ஆதாரப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் அந்த மீதிகளின் சரியான மற்றும் நம்பகத் தன்மையை உறுதிப்படுத்த முடிந்திருக்கவில்லை.

| கணக்கு விடயம் | பெறுமதி<br>ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்று | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) கடன்கொடுத் தோர் மீதி | 43,829,526 | தனிப்பட்டோர் பட்டோலை மற்றும் வயதுப் பகுப்பாய்வு | ரூபா 43,829,526 கடன் கொடுத்தோர் மீதியான நீண்டகாலமாக இனங்காணப்படாதுள்ளதுடன் இது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்காக எதிர்காலத்தில் அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்படும். | நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் தொகைகளை திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்தி ஏற்றுக் கொள்வதற்காக அனைத்து ஆவணச் சான்றுகளும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படுதல் |
| (ஆ) நாணயக் கடித எல்லைக் கணக்கு | 114,127,998 | விபரமான பட்டோலை | பட்டோலைகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (இ) | உப ஒப்பந்த முற்பணங்கள் | 15,299,042 | விபரமான பட்டோலை | பட்டோலைகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வேண்டும். |
| (ஈ) | வாடிக்கையாளருக்குச் செலுத்த வேண்டியவை | 131,756,060 | விபரமான பட்டோலை மற்றும் வயதுப் பகுப்பாய்வு | பட்டோலைகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் தொகைகளை திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்தி ஏற்றுக் கொள்வதற்காக அனைத்து ஆவணச் சான்றுகளும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| (உ) | வியாபாரக் கடன்கொடுத்தோர் - வரவு மீதிகள் | 19,393,442 | விபரமான பட்டோலை மற்றும் வயதுப் பகுப்பாய்வு | பட்டோலைகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஊ) | சில்லறைக் கடன்கொடுத்தோர் - வரவு மீதிகள் | 2,620,086 | விபரமான பட்டோலை மற்றும் வயதுப் பகுப்பாய்வு | பட்டோலைகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (எ) | சில்லறைக் கடன்பட்டோர் | 29,563,152 | விபரமான பட்டோலை மற்றும் வயதுப் பகுப்பாய்வு | பட்டோலைகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஏ) | சில்லறைக் கடன்கொடுத்தோர் | 278,652,082 | விபரமான பட்டோலை மற்றும் வயதுப் பகுப்பாய்வு | நீண்டகாலமாக இனங்காணப்படாதுள்ளதுடன் இது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்காக எதிர்காலத்தில் அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்படும். | |

### 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### 1.6.1 பெறவேண்டியவைகள்

| **கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவக் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| ரூபா 587,623,905 தொகையான கடன்பட்டோர் மீதிகள் 03 ஆண்டுகளிற்கும் மேலாக அறவிடப்படாதிருந்தது. அதற்காக ஐயக்கடன் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருப்பதைத் தவிர்த்து அந்தக் கடன்பட்டோர்களை அறவிடுவதற்காக பயனுள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எஞ்சியுள்ள பெறவேண்டிய தொகைகளை சேகரிக்கும் செயன்முறையில் கூட்டுத்தாபனம் ஈடுபட்டுள்ளது. | நிலுவையிலுள்ள மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களிற் கான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2018 செப்தெம்பர் 18 ஆந் திகதிய பிஈடீ 01/2018 ஆம் இலக்க பொது முய ற்சிகள் சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் படி மோட்டார் வாகனங்களை கொள்வனவு செய்வதற் காக பொது முயற்சிகள் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் ஒப்புதல் பெறப்பட வேண்டிய போதிலும், ரூபா 4,350,000 பெறுமதியான மோட்டார் வாகனத்தைக் கொள்வனவு செய்வதற்காக அவ்வா றான ஒப்புதல் பெறப்பட்டிரு க்கவில்லை. | கோவிட் காலத்தின் போது ஊழியர்களிற்கு போக்குவரத்து வசதி களை வழங்கும் பொரு ட்டு அவசர கொள்வ னவு என்ற ரீதியில் பேரூந்து கொள்வனவு செய்யப்பட்டதுடன், பொது முயற்சிகள் திணைக்கள பணிப்பா ளர் நாயகத்தின் ஒப்புத லைப் பெற்றுக் கொள்வ தற்காக 2022 மே 02 ஆந் திகதி கடித மொன்று அனுப்பி வைக்கப்பட்டது. | சட்டங்கள், விதி கள், பிரமாணங் கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்குவதற்கு உரிய கவனம் செலுத்த வேண் டும். |
| (ஆ) | 2009 யூலை 01 ஆந் திகதிய DMA(2) 2009 ஆம் இல க்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கை | சொத்துக்கள் பதிவேட்டில் தேவையான தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில் லை | சொத்துக்களின் மீள விலைமதித்தலுடன் இணைந்த வகையில் சொத்துக்கள் பதிவேட் டில் தேவையான அனைத்துத் தகவல்க ளும் 2022 ஆம் ஆண்டில் உள்ளடக்கப் படும். | சட்டங்கள், விதி கள், பிரமாணங் கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்குவதற்கு உரிய கவனம் செலுத்த வேண் டும். |

## 1.8 காசு முகாமைத்துவம்

| முகாமைத்துவக் கருத்துரை | | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வங்கிக் கடன் மீதி ரூபா 1,844 மில்லியன் ஆனதுடன், அந்தக் கடனுக்கான வட்டிச் செலவினம் ரூபா 200 மில்லியன் ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் கடன் மற்றும் பெறுகைகள் ரூபா 415.67 மில்லியன் அல்லது 29 சதவீதத்தால் அதிகரித்திருந்த மையால், எதிர்காலத்தில் செயற்திட்டங்க ளின் மூலம் போதியளவு இலாபத்தைச் சம்பாதிப்பதற்கு கூட்டுத்தாபனம் தவறு மாயின் கூட்டுத்தாபனத்தின் நிதி நிலைமை மேலும் மோசமடையும். | கணக்காய்வுச் சுட்டிக் காண்பித்தல் சரியானதாகும். தொழிற்படு மூலதனத் தேவை களிற்காக கடந்த ஆண்டுகளில் பெருமளவு வங்கிக் கடன்களை பெற வேண்டிய நிலை கூட்டுத் தாபனத்திற்கு ஏற்பட்டிருந்ததுடன் அதன் விளைவாக பெருமள வான வங்கிக் கடன் வட்டியை கூட்டுத்தாபனம் செலுத்த வேண்டியிருந்தது. | பொருத்தமான உபாய வழிகளை கையாண்டு வட்டிச் செலவினத்தை இழவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.9 வரிப் பிரமாணங்களுடன் இணக்கமின்மை

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) ரூபா 1,111,086,511 தொகையான பெறுமதிசேர் வரி 2002 ஆம் ஆண்டு முதல் தீர்க்கப்படாமல் வைக்கப்பட் டுள்ளது. | கூட்டுத்தாபனம் எதிர்கொண் டுள்ள நிதிச் சிக்கல்கள் காரணமாக பெறுமதிசேர் வரி மற்றும் தேசத்தைக் கட்டி யெழுப்பும் வரி என்பன தீர்க்கப்படவில்லை. | கூட்டுத்தாபனம் வரிச் சட்டங்களுடன் இண ங்குதல் வேண்டும். |
| (ஆ) ரூபா 6,342,105 தொகையான தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பத்து ஆண்டுகளிற்கும் மேலாக தீர்க்கப் படாமல் வைக்கப்பட்டுள்ளது. | கூட்டுத்தாபனம் எதிர்கொண் டுள்ள நிதிச் சிக்கல்கள் காரணமாக பெறுமதிசேர் வரி மற்றும் தேசத்தைக் கட்டி யெழுப்பும் வரி என்பன தீர்க்கப்படவில்லை. | கூட்டுத்தாபனம் வரிச் சட்டங்களுடன் இண ங்குதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

கூட்டுத்தாபனத்தின் மீளாய்வாண்டின் செயற்பாடுகள் ரூபா 43,124,611 வரிக்கு முன்னரான தேறிய இலாபமொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான வரிக்கு முந்திய நட்டம் ரூபா 257,420,711 ஆக காணப்பட்டதனால் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 300,545,322 பாரிய முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. வருமானத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் ஏனைய செலவினத்தில் ஏற்பட்ட குறைவு என்பன நிதி விளைவுகளில் ஏற்பட்ட இந்த முன்னேற்றத்துக்கான பிரதான காரணங்களாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| (அ) ரூபா 265.69 மில்லியன் பெறுமதியான நான்கு பாலங்களின் நிர்மாண வேலைகளை மீளாய்வாண்டில் பூரணப் படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், உள்ளபடியான செயன் முன்னேற்றம் 65 சதவீதத்திற்கும் குறைவாகவே காணப்பட்டது. | கொவிட் நிலமை காரண மாக மூலப்பொருட்களை பெற்றுக் கொள்வதில் சிரமம், சுற்றாடல் பிரச்சினை கள், திட்டமிடப்பட்ட நிர் மாண வேலைகளில் மாற்ற ங்கள் மற்றும் உடன்படிக் கையிலுள்ள முரண்களி ற்காக ஒப்புதல்களை பெற் றுக் கொள்வதில் சிரமங் களே இதற்கான காரணங் களாகும். | திட்டங்களிற்கு அமை வாக செயற்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) ரூபா 2,184.85 மில்லியன் பெறுமதியான 144 கிராமிய பாலங்களின் நிர்மாண வேலைகள் எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயல்முன்னேற்றமற்ற செயற்திட்டங்க | கொவிட் நிலமை காரண மாக மூலப்பொருட்களை பெற்றுக் கொள்வதில் சிரமம், சுற்றாடல் பிரச்சினை கள், | திட்டங்களிற்கு அமை வாக செயற்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ளாகக் காட்டப்பட்டதுடன், அவற்றில் ரூபா 1,108.82 மில்லியன் பெறுமதியான 72 நிர்மாண வேலைகளின் பௌதீக செயல் முன்னேற்றம் மீளாய்வாண்டின் இறுதியில் 50 சதவீதத்திற்கும் குறைவாகவே காணப்பட்டது. | திட்டமிடப்பட்ட நிர் மாண வேலைகளில் மாற்ற ங்கள் மற்றும் உடன்படிக் கையிலுள்ள முரண்களி ற்காக ஒப்புதல்களை பெற் றுக் கொள்வதில் சிரமங் களே இதற்கான காரணங் களாகும். | |
| (இ) | ரூபா 839.68 மில்லியன் பெறுமதியான ஆறு வீதி நிர்மாண செயற்திட்டங் களை 2021 ஆம் ஆண்டில் பூரணப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்ப ட்ட போதிலும், அந்த நிர்மாண வேலைகள் 2021 திசெம்பர் 31 வரையிலும் பூரணப்படுத்தப்பட்டிருக் காமை அவதானிக்கப்பட்டது. | கொவிட் நிலமை காரண மாக மூலப்பொருட்களை பெற்றுக் கொள்வதில் சிரமம், சுற்றாடல் பிரச்சினை கள், திட்டமிடப்பட்ட நிர் மாண வேலைகளில் மாற்ற ங்கள் மற்றும் உடன்படிக் கையிலுள்ள முரண்களி ற்காக ஒப்புதல்களை பெற் றுக் கொள்வதில் சிரமங் களே இதற்கான காரணங் களாகும். | திட்டங்களிற்கு அமை வாக செயற்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | ரூபா 416.89 மில்லியன் பெறுமதியான ஆறு கட்டிட நிர்மாண செயற்திட்டங் களை 2020 ஆம் ஆண்டில் பூரணப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்ப ட்ட போதிலும், அந்த நிர்மாண வேலைகள் 2021 திசெம்பர் 31 வரையிலும் பூரணப்படுத்தப்பட்டிருக் காததுடன் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அவற்றின் பௌதீக செயல் முன்னேற்றம் 60 சதவீதத்திற்கும் குறைவாகவே காணப்பட்டது. | கொவிட் நிலமை காரண மாக மூலப்பொருட்களை பெற்றுக் கொள்வதில் சிரமம், சுற்றாடல் பிரச்சினை கள், திட்டமிடப்பட்ட நிர் மாண வேலைகளில் மாற்ற ங்கள் மற்றும் உடன்படிக் கையிலுள்ள முரண்களி ற்காக ஒப்புதல்களை பெற் றுக் கொள்வதில் சிரமங் களே இதற்கான காரணங் களாகும். | திட்டங்களிற்கு அமை வாக செயற்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | ரூபா 42.36 மில்லியன் பெறுமதியான நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் செயற்திட்டமொன்றை 2020 ஏப்ரல் 30 இற்கும் பூரணப்படுத்துவதற்கு பட்டிய லிடப்பட்டிருந்த போதிலும், அந்த நிர்மாண வேலையின் பௌதீக செயல் முன்னேற்றம் 2021 திசெம்பர் 31 இல் 75 சதவீதமாக மாத்திரம் காணப்பட்டது. | கொவிட் நிலமை காரண மாக மூலப்பொருட்களை பெற்றுக் கொள்வதில் சிரமம், சுற்றாடல் பிரச்சினை கள், திட்டமிடப்பட்ட நிர் மாண வேலைகளில் மாற்ற ங்கள் மற்றும் உடன்படிக் கையிலுள்ள முரண்களி ற்காக ஒப்புதல்களை பெற் றுக் கொள்வதில் சிரமங் களே இதற்கான காரணங் களாகும். | திட்டங்களிற்கு அமை வாக செயற்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 42 செயற்திட்ட வேலைகளிலிருந்து ரூபா 189,977,006 தொகையான மொத்த நட்டம் இனங்காணப்பட்டிருந் தது. | கொவிட் 19 நிலமை, வாடிக்கையாளரின் கொடுப் பனவு தாமதங்கள், சுற்றா டல் பிரச்சினைகள் (வெள் ளம்), உயர்வான பொருட் கிரயம் மற்றும் கூட்டுத்தா | திட்டங்களிற்கு அமை வாக செயற்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | பனம் எதிர்கொண்ட நிதிச் சிக்கல்களே இதற்கான காரணங்களாகும். | |

### 3.2 குறைவாகப் பயன்படுத்திய ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| ரூபா 10,392,151 பெறுமதியான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் இரத்மலானை தலைமை அலுவலக வளவில் விளைவற்று வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | யன்படுத்த முடியாதுள்ள சொத்துக்களை கைதவிர்ப்ப தற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சொத்துக்கள் உரிய விதத்தில் பயன்படுத்தப்ப டுவதனை உறுதிப்படுத் துதல் வேண்டும். |

### 3.3 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| **(அ)** 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 489 ஆகவிருந்த அதேநேரம் உள்ளபடி யான பதவியணி 634 ஆகவிருந்தது. அதற்கிணங்க இது கூட்டுத்தாப னத்தின் பல்வேறு பதவிகளிற்கு 145 ஊழியர்களின் மிகையான ஆட்சேர்ப்பை காட்டுகின்றது | மேற்கொள்ளப்பட்ட நிர்மாண வேலைகளிற்கு தேவைப்பட்ட ஊழியர்களின் அடிப்படையில் கூட்டுத்தாபனம் பதவியணியி னரை ஆட்சேர்ப்புச் செய்தது. | கால அடிப்படையில் மீளாய்வினை மேற்கொ ண்டு நெகிழ்வுத் தன்மை யான பதவியணி மட்டங் களை பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) கூட்டுத்தாபனத்தின் சிரேஷ்ட முகா மைத்துவ தரத்திலுள்ள இரண்டு பதவிகள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் வெற்றிடமாகக் காணப்பட்டன. | இந்த இரண்டு பதவிகளையும் நிரப்புவதற்கான அங்கீகாரத்தை பெறுவதற்கான கோரிக்கை யொன்று முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு மேற்கொள்ளப்பட்டது. | கால அடிப்படையில் மீளாய்வினை மேற்கொ ண்டு நெகிழ்வுத் தன்மை யான பதவியணி மட்டங் களை பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) சிவில் பொறியியலாளர் களுக்கான அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 19 ஆன போதிலும், ஒப்பந்த அடிப்ப டையின் கீழ் 85 சிவில் பொறியிய லாளர்கள் ஆட்சேர்க்கப்பட்டுள்ளனர். | மேற்கொள்ளப்பட்ட நிர்மாண வேலைகளிற்கு தேவைப்பட்ட ஊழியர்களின் அடிப்படையில் கூட்டுத்தாபனம் பதவியணியி னரை ஆட்சேர்ப்புச் செய்தது. | கால அடிப்படையில் மீளாய்வினை மேற்கொ ண்டு நெகிழ்வுத் தன்மை யான பதவியணி மட்டங் களை பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினை விஞ்சி 22 பாதுகாப்பு உத்தியோக த்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டுள்ளனர். | நாட்டிலுள்ள பல்வேறு பிரதேச ங்களில் காணப்படுகின்ற செய ற்திட்ட தளங்களிலுள்ள சொத் துக்களை பாதுகாப்பதற்காக 2021 ஆம் ஆண்டில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க் கப்பட்டனர். | கால அடிப்படையில் மீளாய்வினை மேற்கொ ண்டு நெகிழ்வுத் தன்மை யான பதவியணி மட்டங் களை பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |